LIBRARY
5 - SEP 1966
STATE LEGISLATURE. MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 16th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Inam Estates

* *S. N. Q.—No.* 5—SRI M. KALYANASUNDARAM :
SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any report was received from the Collector of Tiruchirappalli, regarding details of Inam Estates, not notified so far, under the Inam Estates Abolition Act; and

(*b*) if so, the details of the report and when a final decision would be taken?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ஆ. கு. சுப்பையா : திருச்சி ஜில்லா புதுக்கோட்டைப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இந்த இனாம் ஒழிப்பில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று அந்தப் பிரதேச விவசாயிகள் சங்கத்திலிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்தனவா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோன்ற ஒரு விண்ணப்பம் வந்ததாகத் தெரியவில்லை. புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இனாம்கள் எல்லாம் புதுக்கோட்டை இனாம் சட்ட அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மீதம் இருக்கக்கூடியவைகளை யும் காலாகாலத்தில் நோட்டிஃபிக்கேஷன் செய்து எடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா : பல கிராமங்கள் இம்மாதிரி எடுத்துக் கொள்ளப்படாததால் சம்பந்தப்பட்ட விவசாயிகளை எல்லாம் இனாம்தார்கள் வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு ஸ்பெஷல் தாசில்தாரையாவது நியமித்து இன்றையதினம் விவசாயத்தில் உள்ள விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இவற்றை எடுத்துக் கொள் வதற்கு சட்ட அடிப்படையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படும். ஆகவே, ஸ்பெஷலாக தாசில்தார் தேவையில்லை. தேவைப் பட்டால் அரசாங்கம் வேண்டிய கவனம் காட்டும்.